**29.01.2026**

**C.C. No. 50/2024**

**எ.ம.சா. 1. பிரீத்தி லோசனி, க/பெ. பாலகோபால், காரைக்குடி**
**( சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

**1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Sc., M.B.A படித்துள்ளேன். நான் காரைக்குடியில் எத்தனை ஆண்டுகளாக வசித்து வருகிறேன் என்றால் நான் பிறந்தது, வளர்ந்தது எல்லாம் காரைக்குடிதான். நான் புகார்தாரரிடம் வாங்கிய பணத்தை எந்த தேதியில் எப்போது கொடுத்தேன் என்ற விபரத்தை எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் G–Pay அனுப்பியதற்கு வங்கி ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்துள்ளேன். எனது முதல் விசாரணையில் எந்தெந்த தேதி என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் புகார்தாரருக்கு செலுத்திய தொகை எல்லாம் நான் வட்டியாக செலுத்தியது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக அசல் தொகை செலுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ரூ. 1 லட்சத்து 20 ஆயிரம் வட்டியாக செலுத்த முடியாது. பொதுவாக வட்டி பல ஆண்டுகளுக்கு செலுத்தாமல் பாக்கி வைத்திருந்தால் மொத்தமாக பெரிய தொகை வரும் என்றால் சரியல்ல. நான் வட்டிக்காக பணம் வாங்கவில்லை. கைமாற்றாக வாங்கினேன்.**

**2) நான் மாதம் மாதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு புகார்தாரரிடம் பணம் வாங்கினேன் என்றாலும் தற்போது நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் பணம் கொடுத்து முடித்தற்கு ஆவணம் எதுவும் எழுதி வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. புகார்தாரர் தர மறுத்துவிட்டார். நான் உண்மையாகவே பணம் செலுத்தியிருந்தால் நான் புகார்தாரரிடம் எழுதி வாங்கியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் புகார்தாரர் தர மறுத்துவிட்டார் என்று தற்போது புதிதாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது வாடகை வீட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் 15 ஆண்டுகள் ஆகிறது. 15 ஆண்டுகளாக நானும் என் கணவரும் வாடகை வீட்டில் வசித்து வருகிறோம் என்றால்**

சரிதான்.

3) என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள தேதி 18.02.2025 என்றால் சரிதான். நான் தற்போதுதான் கணினியில் பதிவிறக்கம் செய்தேன். இதில் குறிப்பிட்டுள்ள முகவரி எனது தாயார் வீட்டு முகவரி. ம.சா.ஆ.3ல் குறிப்பிட்டுள்ள முகவரில்தான் எனக்கு நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணை கிடைக்கப்பெற்றது என்றால் எனக்கு தெரியாது, நான் பார்க்கவில்லை. இந்த வழக்கில் ஆஜரான பின்னர் வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.3 ல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு சார்பு செய்யப்பட்டதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரியாது. எனது முதல் விசாரணையில் நான் அறிவிப்பை பெறவில்லை என்றும், அஞ்சலக ஒப்புகை அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்றும் சொல்லிவிட்டு தற்போது முரணாக வழக்கறிஞர் அறிவிப்பு பற்றி விபரம் தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் அஞ்சலக ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்பதை பொறுத்து அஞ்சலக அதிகாரி மீது எந்த சட்ட நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

4) புகார்தாரர் பிரச்சனை செய்ததாக நான் சொல்லும் சமயத்தில் புகார்தாரர் மீது நான் சட்ட நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. நான் வேலையை விட்டு வந்துவிட்டேன். இதே நீதிமன்றத்தில் என் மீது வேறு ஒரு வழக்கும் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் இருக்கிறது, ஆனால் அந்த வழக்கின் புகார்தாரர் யார் என்றே எனக்கு தெரியாது. என் கணவர் மீது புகார்தாரர் தாக்கல் செய்த காசோலை மோசடி வழக்கு ஏற்கனவே என் கணவர் குற்றவாளி என்று முடிவு ஏற்பட்டது என்றால் அப்படித்தான் அவர் சொன்னார். என் கணவர் அவரது காசோலையை புகார்தாரருக்கு கொடுத்தன் பேரில்தான் அந்த வழக்கு நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் புகார்தாரருக்கு நான் 1 காசோலை மட்டுமே கொடுத்தேன் என்றாலும் ஆனால் நான் 3 காசோலைகள் கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு காசோலையை காவல் நிலையத்தில் வைத்து மிரட்டி வாங்கியது தொடர்பாக நான் சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால்

**இல்லை. உண்மையில் என்னை காவல் நிலையத்தில் மிரட்டி காசோலை பெற்றிருந்தால் நான் சட்ட நடவடிக்கை எடுத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் பெற்ற கடனிற்காக காசோலையை கொடுத்துவிட்டு தற்போது வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து மிரட்டி வாங்கியதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரருக்கு சட்டப்படி பணம் கொடுக்கவேண்டியுள்ளது என்றாலும் நான் காசோலை கொடுத்து மோசடி செய்ததற்காக சட்டப்படி தண்டிக்கப்படவேண்டிய நபர் என்றாலும் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.29 17:10:14 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி (மு.கூ,பொ)